செ.வெ. எண்: 514 நாள்: 02.09.2012

## செய்தி வெளியீடு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும், வேலை வாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம்" என்ற பாடிய மகாகவி பாரதியார் உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம் என்று கூறினார்.

பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வளர்ச்சி இன்றியமையாதது என்பதால் தொழில் வளர்ச்சிக்கு தேவைப்படும் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காகவும், நிதி உதவி அளிப்பதற்காகவும், அரசு சார்பில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் என்ற ஒரு நிதி நிறுவனம் அரசால் 1949 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்த நிறுவனம் இதுவரை 8,600 கோடி ரூபாய்க்கு மேல் நிதி உதவியினை அளித்து ஒரு லட்சத்திற்கு மேல் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியுள்ளது. இந்த நிறுவனம் வங்கிகளில் கடன் பெற இயலாத முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாகவும் தொழில் முதலீட்டுக் கடன் வசதி செய்து வருகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், நடப்பு ஆண்டில், 3 விழுக்காடு வட்டித் தள்ளுபடியில் புதிய கடன்கள் வழங்குவதற்கும், மேற்படி தள்ளுபடி தொகையில், ஆண்டின் இறுதியில் 25 கோடி ரூபாய் வரையிலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அரசிடம் மீளப் பெற்றுக் கொள்ளவும் (Reimbursement), இத்திட்டத்தின் முதலாம் ஆண்டின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், இரண்டாம் ஆண்டிற்கு நீட்டிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது மட்டுமல்லாமல், இத்திட்டத்தில் பயன்பெறும் தொழில் முனைவோர்கள் மாநில/மத்திய அரசுகள் வழங்கும் பல்வேறு இதர மானியங்கள்/ஊக்கத் தொகையையும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த வட்டியில் கடன் வசதி அளிக்கப்படுவதால், தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் குறைந்த செலவில் தொழில் தொடங்கவும், தமது நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்ளவும் வழிவகை ஏற்படும். இதன் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் பயன் அடையும். மேலும் தொழில் முன்னேற்றம், கூடுதல் வேலை வாய்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த பொருளாதார முன்னேற்றம் தமிழ்நாட்டில் ஏற்பட இந்த நடவடிக்கை வழி வகுக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.

நாள் :- 2.9.2012.